தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1971 ஜூலை 29.

TAMIL NADU LEGISLATURE 1 APR 197 MADRAS

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின்பு 1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரையிலும் கோயில்பாளையம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்தவரும், 1959-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டுவரை சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவராக இருந்தவருமான திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள், 28—7—1971-ம் நாளன்று மறைந்ததைக்குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Separate University at Coimbatore

* 527 Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to start a separate University at Coimbatore; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.